VIEW OF THE SPIRIT.

[A Tract of 12 pages, is a scriptural account of the work of the holy Spirit. It shows that the Holy Spirit is God—is the inspirer of the Bible—convicts of sin—sanctifies the heart and makes the Bible plain to man, and assists them in their preparation for the joys of heaven.]

ஆவிதரிசனம்.

பரிசுத்த ஆவியானவர் ஆரென்பதையும் அவருடைய செயல் இன்னதென்பதையுங் காட்டியது.

சூரியனை அதின் சொந்த ஒளியினாலே காண்கிறதுபோலப் பராபரனையும் அவருடைய சொந்த வெளிப்படுத்தலினாலே அறிகிறோம். வானங்களிலும் பூமியிலும் பராபரனுடைய ஞானத்தையும் மகிமையையும் பற்றி எண்ணி முடியாத அத்தாட்சிகள் உண்டாய் இருந்தாலுந் தேவ வசனம் இல்லாமற் பராபரனுடைய இலட்சணங்களையும் மனிதனுடைய நிலைமையையும் இரட்சிப்பின் வழியையும் அறியக்கூடாது.

இந்த வெளிப்படுத்தல் கலகம்பண்ணின பாவிகளாகிய மனிதர் தேவாவியின் எவுதலினாலே திரும்பப் பராபரனண்டை சேர்க்கப்பட்டேவண்டும் என்பதை நமக்குப் போதிக்கின்றது. இவருடைய எவுதல் இல்லாமல் மனிதன் இரட்

2d. Ed.] AMERICAN MISSION PRESS JAFFNA. [5,000
1844.

தைக்கப்படுவானென்று எண்ணுவது என்னபோ
லவேயானுந் தசப்பான மரம் நல்ல கனி கொ
டுக்குமென்றுந் தீமையான காரணம் நற்காரி
யத்தை விளைக்குமென்றும் இருள் வெளிச்சத்
தையும் கசத்தம் அசுத்தத்தையும் உண்டாக்கு
மென்றும் எண்ணுவதுபோலேயாம். ஆகையி
னாலே பரிசுத்தாவியானவரைக் குறித்து இதி
லே விபரமாக,

அவர் ஆரென்றும், அவர் மனிதருக்குள்ளே
நடப்பிக்கிற கிரியைகள் இன்னின்னவைகளென்
றுஞ் சொல்லுவேன், கவனியுங்கள்.

பரிசுத்தாவியானவர் ஆரென்கில் அவர் அரு
பமுந் தெய்வீகமும் உள்ளவராயும் பிதாக்கு
மான் ஆவியென்னுந் திரித்துவத்தில் ஒருவ
ராயும் இருக்கிறார். இது மெய்யென்று பரிசு
த்த தேவ வசனத்திலே நன்றாய் விளங்குகின்ற
து. எப்படியெனில் இயோர்தானென்னும் ந
தியிலே இயோவான் ஸ்நானனாலே கிறிஸ்துவா
னவர் ஞானஸ்நானம் பெற்றபொழுது பரிசுத்
தாவியானவர் புறாவின் உருபமாய் இறங்கி
னதென்றும் என்றென்றைக்கும் உங்களுடனே
கூட இருக்கும்படிக்கான சத்திய ஆவியாகிய
வேறு தேற்றுகிறவரைப் பிதாவானவர் உங்களு
க்குக் கொடுக்கும்படிக்கு நான் அவரை வே
ண்டிக்கொள்வேன். அத்தச் சத்திய ஆவியை
உலகத்தார் காணுமலும் அறியாமலும் இருக்
கிறபடியால் அவர்கள் அவரைப் பெற்றுக்கொ
ள்ளமாட்டார்கள். நீங்களோ அவர் உங்களுட
னே கூட இருந்து உங்களுக்குள்ளே இருப்ப

தால் அவரை அறிவீர்கள். பிதாவின் இடத்தி
ல் இருந்து புறப்படுகிறவருமாய் இருக்கிற சத்
திய ஆவியாகிய தேற்றுகிறவர் வரும்பொழுது
அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்
என்றும் நீங்கள் புறப்பட்டு உலகத்தார் எல்லா
ரையுஞ் சீஷராக்கிப் பிதாக் குமாரன் பரிசுத்த
ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நா
னங் கொடுக்கலென்றுந் திருவுளம்பற்றினார்.

இந்த வாக்கியங்களிலுமே பரிசுத்தாவியா
னவர் பிதாக் குமாரன் என்னுந் தேவனுக்கு
மேற்றமையின்றி ஒன்றித்தவரென்றும் மனி
தர் இரட்சிப்பை அடையும்பொருட்டாக ம
னிதரை வசப்படுத்துகிறவர் என்றும் அநுப
மம், நித்தியம் முதலியதேவலட்சணமுள்ளவரா
யும் நம்முடைய புத்திக்கெட்டாதவராயும் இரு
க்கிறாரென்றும் விளங்கும்.

இப்படியே அவர் பிதாவிலிருந்துங் குமார
னிலிருந்தும் வருகிறவரென்று சொல்லி இருக்
கிறதிலுமும் பிதாக் குமாரன் என்னும் நாமங்க
ளோடும் அவருடைய நாமத்தையுஞ் சேர்த்து
ச் சொல்லி எல்லாத் தேசத்தாருக்கும் ஞான
ஸ்நானங் கொடுக்க வேண்டுமென்று அப்போ
ஸ்தலருக்கு இயேசுவானவர் கட்டளை கொடு
த்ததிலுமும் பிதாக் குமாரன் பரிசுத்த ஆவி
என்பவர் ஒருவராய் இருக்கிறதுமன்றி மூவரா
யும் இருக்கிறாரென்று அறியலாம்.

மேலும் பரிசுத்த ஆவியானவர் பராபரனுப்
இருக்கிறாரென்பதற்கு அத்தாட்சியாக அவர்
மனிதருக்குள்ளே நடப்பிக்கிற கிரியைகளை

ன்னவென்று விரித்துச் சொல்லுவேன். அ வைகளென்னவென்றால்,

முதலாவது. பரிசுத்தாவியானவர் வேதவாக்கியத்தை இந்தருளினதே.

நமக்குக் கிடைத்திருக்கிற வேதம் முற்காலத்திலே குறித்த குறித்த தரணங்களிலே அந்தந்த மனிதர்கள் எழுதினதும் மனிதருடைய அறிவுக்கு எட்டாததும் மனிதர் எந்தக்காலத்திலும் எழுதக் கூடாததுமான தீர்க்கதரிசனம் முதலான அநேக காரியங்கள் அடங்கி இருப்பதால் அது மனிதராலே அல்லப் பரிசுத்தாவியாகிய பராபரனாலே வந்த சத்திய வசனமென்றறிவோம்.

இப்படியே அப்போஸ்தலனாகிய பவுல் வேதவாக்கியங்கள் எல்லாந் தேவ ஆவியால் உண்டானவைகளென்று சொல்லுகிறார். அப்போஸ்தலனாகிய பேதுருவுந் தீர்க்கதரிசனமானது பூருவத்திலே மனிதருடைய சித்தத்தினாலே வரவில்லை. பராபரனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே எவப்பட்டு விளம்பினார்களென்று சொல்லுகிறார். இயேசுநாதருந் தமது சிஷ்யரோடே பிதாவானவர் என் நாமத்திலே அனுப்பும் பரிசுத்த ஆவியாகிய தேற்றுகிறவரே சகலத்தையும் உங்களுக்கு உபதேசம் பண்ணி நான் உங்களுக்குச் சொன்ன யாவையும் நீங்கள் நினைக்கும்படி செய்வாரென்று திருவுளம்பற்றினார். ஆகையினாலே பரிசுத்த ஆவியானவரே வேதத்தை அருளிச் செய்தவர் என்று தெளிவாய் விளங்கும்.

இரண்டாவது. பரிசுத்த ஆவியானவர் பாவிகள் தங்கள் பாவத்தை உணர்ந்து அறியச் செய்வதே.

சுபாவத்தின்படியே மனிதர் பாவத்தை விரும்பிச் செய்கிறவர்கள். பாவம் ஆகாதென்று கேள்விப்பட்டாலும் அப்படிக் சுற்பிக்கிற பல நூல்களைப் படித்தாலுந் திரும்பத் திரும்பப் பாவத்தையே விரும்பிச் செய்கிறார்கள். அப்படி இருந்தும் சுவிசேஷத்தைக் கேட்கும் பொழுது அது மனதிலே பதியப்பட்டுப் பாவந் தகாதென்றும் பராபரன் அதை அரோசிக்கிறாரென்றுங் கண்டு உணர்ந்து என்னை நேசிக்கிற பராபரன் அரோசிக்கிற பாவத்தைச் செய்தேனே என்றும் மனதிலே துயரங்கொண்டு இனி நான் பாவத்தை ஒரு பொழுதும் விரும்பிச் செய்கிறதில்லை என்று தீர்மானித்துக்கொண்டு எவ்விதத்திலும் அதற்கு விலகி நடக்கப் பிரயாசப்படுகிறார்கள்.

இந்த அறிவு அவர்கள் படித்த படிப்பினாலே வருகிறதல்ல, வேதத்தை அருளிச் செய்த பரிசுத்த ஆவியினாலே வருகிறதென்று தெளிவாகத் தெரியப்படுகின்றது. இப்படியே வேதமும் பரிசுத்த ஆவியானவர் வந்து பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தாருக்கு மெய் அறிவைக் கொடுப்பாரென்று சொல்லுகின்றது.

மூன்றாவது. பரிசுத்த ஆவி என்னும் பராபரன் மனிதருடைய இருதயத்தைச் சுத்தம் பண்ணுகிறதே.

சென்மசுபாவத்தின்படி துற்குணமுள்ளவர்களாய்ப் பராபரனுக்கு விரோதமாக நடந்து வருகிற மனிதர் பரிசுத்த ஆவியானவருடைய அருளைப் பெற்றுக்கொண்ட பின்பு தங்கள் துற்குணங்களை விட்டு மனப்பற்றுதலோடு அவரை நெருங்குவார்கள். மூன்னே பொய் வஞ்சகஞ் சண்டைமுதலிய பொல்லாங்குக்கு இடங்கொடுத்து உலக காரியங்களை நாடித் தேடினவர்கள் பின்பு அப்பெயர்ப்பட்ட பாவங்களுக்கு இடங்கொடாமற் சகலரோடேயும் உண்மையாயுந் தாழ்மையாயும் நடந்து மோட்ச காரியங்களை விரும்பித் தேடுவார்கள். பரிசுத்த ஆவி கொடுக்கிற குணங்களைப் பெற்றுக்கொள்ளுற மூன்னே பராபரனை விட்டு விக்கிரகங்களையுஞ் சுரூபங்களையும் பசாசுகளையும் வணங்கினவர்கள். அவைகளைப் பெற்றுக்கொண்ட பின்பு சகலவித விக்கிரக ஆராதனையையும் பசாசின் வணக்கத்தையும் விட்டுப் பராபரனை வழிபட்டு அவருடைய பிள்ளைகளாய் நடந்து மோட்ச சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள ஏதுவானவர்களாய் இருப்பார்கள்.

இவ்விதமான மாறுதல் பரிசுத்த ஆவியானவராலே தான் உண்டாகின்ற தென்பதை ஒருவன் சலத்திலும் ஆவியிலும் பிறவாவிட்டால் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்கமாட்டான் என்றும் நாஞ் செய்த நீதிக்கேற்ற கிரியைகளின் நிமித்தமல்ல, மற்ற பிறப்பாகிய மூழுக்கிலுஞ் பரிசுத்தஆவி செய்கிற புதுதாக்குதலிலுஞ் அவர் தமது சுய இரக்கத்திலுலே

ஆக்கியோன்.

பூருவகாலத்திலிருந்த எந்த மனுஷனுமது மோசேயை டைந்த சிரேஷ்ட நிலைமையை அடையவில்லை. மோசே தேவனுடன் சுவேஷ்டமாய்ச் சம்பாஷித்ததுபோல வேறெந்தமனுஷனுமது அவருடன் சம்பாஷித்ததில்லை. அவன் சகல மனுஷரிலும் அதிக சாந்தமுள்ளவனென்றும் சொல்லப்படுகிறான். ஆனால் அவன் எந்த மனுஷனுமது சகித்த அளவிலும் பார்க்க இஸ்ரவேற் சனங்களாலுண்டானவைகளை அதிகமாய்ச் சகிக்கவேண்டியிருந்ததினால் இதற்கு அதிக சகிப்பு என்பது பொருள். மோசே தானே மேற்கூறிய இரு குறிப்புகளையும் எழுதினாலும் அது தற்புகழ்ச்சி என்னும் குற்றத்தக்கிடமாகாது. யோவான் தன்னை இயேசுவுக்கன்பான சிஷனென்று எழுதியிருப்பது போல, மோசேயும் தன்னைக்குறிக்குமிவைகளை இலக்ஷசத்திலொரு பங்காக எழுதுவது அவசியமாயிருந்தது.

சிலர், மோசேதான் பஞ்சாகமங்களுக்கு ஆக்கியோனாயிருந்தால், அவன் "நான்" என்று தன்மையிடத்திற் பேசாவானேயன்றி, "அவன்" என்றுபடர்க்கையிடத்திற்பேசமாட்டானென்று ஆட்சேபிக்கின்றனர். ஆனால் இதிகாசங்களை எழுதுகிற எவர்களாவது அப்படித் தங்களைத் தன்மையிடத்தில் வைத்துப் பேசுகிறதேயில்லை. அப்படிப் பேசுதல் சரியாயிருக்கமாட்டாது. சுவிசேஷ ஆக்கியோர்களாகிய மத்தேயு, யோவான் முதலியோரும் "நான்" என்று எழுதவில்லை. பஞ்சாகமங்களின் கடைசியில் எழுதப்பட்டிருக்கிற மோசேயின் மரணசம்பவம் அவனே அந்த நூலாக்கியோனல்லனென்று திருஷ்டாந்தப்படுத்தமாட்டாது. அது இன்னொருவனால், ஒருவேளை யோசுவாவினால் எழுதப்பட்டதென்பது தெளிவு. உபாகமத்தின் கடைசியிலுள்ள இரண்டு மூன்று அதிகாரங்களையும், மோசேயையும் யோசுவாவையுங் கூடி எழுதும்படி சொல்லப்பட்டிருக்கிறதை நாம் காண்கிறோம். (உபா. 31: 19.) மோசேயைப்போல் ஒரு தீர்க்கதரிசியும் தோன்றினதில்லை என்னும் வசனம், மோசேயின் மரணத்தைப்பற்றி எழுதினவனாலே எழுதப்பட்டதேயன்றி அம் மோசேயினால் எழுதப்பட்டதன்று.

மோசே சனங்களுக்குக் கொடுத்தபிரமாணங்கள் அவனுடைய சுய பிரமாணங்களல்ல. அவைகள் மோசேயி

நம்மை இரட்சித்தாரென்றுந் திருவுளம் பற்றி இருக்கிறதினாலே அறிந்துகொள்ளுவோம். இவ்விதமாகப் பரிசுத்த ஆவியானவர் நம்மைத் தெளிந்திருக்கப் பண்ணுவதுமன்றி நம்மைச் சுத்தமுமாக்கிக் திதித்துவின் சாயலையுந் தருகிறார்.

நாலாவது. பரிசுத்த ஆவியானவர் தேவ காரியங்களை விளங்கச் செய்வது.

வேதத்திலே தேவ லட்சணங்களையும் நித்திய காரியங்களையுங் குறித்து எழுதியிருந்தும் அது நமது புத்திக்கெட்டாததாய் இருக்கையாற் பரிசுத்த ஆவியானவரே அவைகளை நமக்கு விளங்கப்பண்ண வேண்டும். அல்லாதிருந்தால் அதைப் பலமுறையுங் கேட்டு வாசித்து வாய்ப்பாடமாகப் படித்திருந்தாலும் நமது மனது வெளிச்சம் அடைவதுமில்லை. அதின் உண்மை பிடிபடுவதுமில்லை. ஆதலாற் பரிசுத்த ஆவியானவரே நமது இருதயத்தில் உள்ள சகல அழுக்கையும் நீக்குகிறவருந் தேவ காரியங்களைப் பற்றிய சகல அறிவும் விசுவாசத்தினாலே உண்டாகுஞ் சந்தோஷங்களும் ஞான காரியங்களில் நம்பிக்கையும் நமது மனதிலே பெலன்கொள்ளும்படி செய்கிறவருமாய் இருக்கிறார். இதற்குத் திருட்டாந்தம்,

சென்மச் சுபாவத்தின்படியான மனிதன் பராபரனுடைய ஆவிக்கு உரியவைகளை ஏற்றுக் கொள்ளமாட்டான். அவைகள் அவனுக்குப் பயித்தியமாகத் தோன்றுமே. மேலும் அவைகளை ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கவேண்டிய படியால் அவைகளை அறிய

மாட்டான். ஆவிக்கு உரியவனே எல்லாவற்றை யும் ஆராய்ந்து நிதானித்து மற்றொருவனும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். அவனுக்கு ப் போதிக்கத்தக்கதாகக் கருத்தருடைய சிந் தையை அறிந்தவன் யாவன் என்றும் நீங்கள் எ ன்ன பேசுவோமென்றும் முன் கவலைப்படாம லும் சிந்தித்துக்கொள்ளாமலும் இருங்கள். நீங்களல்லப் பரிசுத்த ஆவியே பேசுகிறவர் ஆ கையால் அந்நேரத்திலே உங்களுக்கு அளிக்க ப்படுவதையே பேசக்கடவீர்கள் என்றும் நீங் கள் பேசவேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியா னவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப் பார் என்றும் சொல்லப் பட்டிருக்கின்றது. அன்றியும் நீங்கள் பராபரனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும் பராபரனுடைய ஆவி உங்களிடத்தில் வாசமாய் இருக்கிறதென்று அ றியாமல் இருக்கிறீரா என்றும் உங்கள் சரீரமா னது பராபரனுலே நீங்கள் பெற்றதும் உங்க ளிற்றங்குகிறதுமாய் இருக்கிற பரிசுத்தாவியி னுடைய ஆலயமாய் இருக்கின்றதென்றும் அ றியாமல் இருக்கிறீர்களோ என்றும் பராபர னுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிற படியால் நீங்கள் சரீரத்துக்கு ஏற்றபடியல்ல ஆவிக்கு ஏற்றபடி நடக்கிறவர்களாய் இருக்கிறீ ர்கள் என்றும் நீங்கள் பரிசுத்த ஆவியாலே பெ ற்ற அபிஷேகம் உங்களில் நிலைகொண்டிருக் கின்றதென்றும் பராபரனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவி உங்களிடத்திலே தங்கி இ ருக்கிறார் என்றும் வேதஞ் சொல்லுகின்றது.

இப்படியே பரிசுத்த ஆவியானவர் இனிமேல் ஒவ்வொரு மனிதனுக்கும் பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத் தீர்த்தலைக் குறித்தும் உணர்த்தி இருதயத்தை மாற்றி மேலான தேவ காரியங்களையும் காண்பித்து எல்லா மனிதரையும் பராபரனுக்குக் கீழ்ப்படியப் பண்ணுவார். இவ்வுலகிலே விக்கிரக சொரூபங்களையும் அவைகளுக்குச் செய்யுஞ் சடங்கு ஆராதனைகளையும் விட்டுக் குணப்பட்டுக் கிறிஸ்து இயேசுவை நம்பி ஒன்றான பராபரனை வணங்குகிறவர்கள் இப்பொழுது கொஞ்சப் பேராய் இருந்தாலும் இனிமேல் எல்லாரும் விக்கிரக வணக்கத்தை விட்டுக் கிறிஸ்தவானவரை எதிர்பார்த்துக்கொண்டு ஒரே ஒருவரை வணங்கும்படிக்கு இருக்குந் தேவாலயத்துக்கே எல்லாரும் போவார்கள். புராண காவியங்கள் கதைகள் வாசிக்கிறதை விட்டு வேதவசனத்தையே இனிமேல் வாசிப்பார்கள். மூப்பியோரும் இளைஞரும் செல்வரும் வறியரும் பெரியோரும் எளியோரும் உடன் பிறந்த சகோதரரைப் போலச் சமாதானமாய்க் கூடி இருந்து தெய்வ காரியங்களை ஒருவரோடே ஒருவர் பேசி மிகுந்த சந்தோஷத்துடனே பராபரனுக்கு ஏற்கும் விதமாக அவருடைய கீர்த்தனங்களைப் பாடுவார்கள். இப்படியே அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான். சந்திரன் இல்லாமற் போகுமட்டும் மிகுதியான சமாதானம் இருக்கும். சகல இராசாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள். சகல சாதி

களும் அவரைச் சேவிப்பார்கள் என்றும் நாம் நம்முடைய நியாயப் பிரமாணங்களை அவர்கள் மனதிலே கொடுத்து அவைகளை அவர்கள் இருதயத்தில் எழுதி அவர்களுக்குப் பராபரனாய் இருப்போம். அவர்கள் நமக்குக் குமாரருங் குமாரத்திகளுமாய் இருப்பார்கள் என்றும் வேதஞ் சொல்லுகின்றது.

இவ்விதமாய் உலகத்தாருக்கு இனிமேற் பூரணமான கிருபை பரிசுத்த ஆவியானவராலே உண்டாகும். அக்காலத்தில் விக்கிரக ஆராதனை பொய் விபசாரம் சாதிவேற்றுமை எரிச்சல் முதலான பாவங்கள் இராது. ஒவ்வொரு வீட்டாரும் இடைவிடாமல் அகக்களிப்புடனே தேவவசனத்தை வாசித்துப் பரிசுத்த ஆவி என்னும் பராபரன் இந்தருளும் ஆசீர்வாதங்களை விரும்பி வேண்டுதல்செய்து துதித்து வணங்கி வருவார்கள்.

இந்தக் கிரியைகளை எல்லாம் உற்றுப் பார்க்குமிடத்தில் மனிதருடைய ஆத்துமா இடைறும்படிக்கான சகல எதிரிகளையுந் திரித்துவத்திற் பிதாவுங் குமாரனுஞ் செய்வதுபோலப் பரிசுத்த ஆவியானவருஞ் செய்கிறார் இம்மூவருடைய செயலும் ஒன்றியாதே போலுல் ஒரு ஆத்துமா என்கிலும் ஈடேறமாட்டாது. அதிலுலே இம்மூவருங் கூடிய திரியேகத்தான் பராபர வஸ்துவென்று விளங்கும்.

இப்பொழுது குறிக்கப்பட்ட செயல்கள் எல்லாம் பரிசுத்த ஆவியினுடைய செயல். ஆதலால் அவைகளை அற்பமாய் எண்ணுவதும் அ

வருடைய கிருபையிலுல் மனந் திரும்பிக் கு
ணப்பட்டவர்களை நிந்திப்பதும் அவைகளுக்
குக் காரணராகிய பராபரவஸ்துவை நிந்திப்
பதாம். காரியம் இப்படி இருக்கக் கிறிஸ்து
வேதத்தை வாசித்து அறிந்திருக்கிற நீங்கள்
அந்த வேதத்தையாவது அதைக் கைக்கொண்
டவர்களையாவது அதிற் சொல்லப்பட்ட வழி
தான் பராபரன் உண்டாக்கின வழியென்று
உங்கள் மனதிலே கொள்ளுகிற சிந்தனையையா
வது விரோதிக்கும்பொழுது ஆரை விரோதி
க்கிறீர்கள் என்று உணர்ந்து பாருங்கள். உங்
களை உண்டாக்கின திரியேக பராபரனை அல்
லவோ விரோதிக்கிறீர்கள். அவரோடே மாறு
பட்டு இப்படி விரோதஞ் சாதிப்பது உங்க
ளுக்குப் பெரிய பயங்கரமும் கேடுமல்லவா?
அவருடைய கோபத்தை நீங்கள் தாங்கக்கூடு
மா? அவருடைய கோபம் அநேகமாயிரம் இ
டியேற்றைப் பார்க்கக் கடினமாயிருக்கும். அ
வருடைய சாபம் உங்களைப் பிடித்துக்கொண்
டால் ஒருபொழுதும் நீங்கமாட்டாது. உங்க
ளுடைய சீர் மிகவும் பரதபிக்கப்படதிதக்கதா
கவேயிருக்கும். மரணகாலத்திலே அவருடை
ய உக்கிரத்தைக் கண்டு பயந்து புலம்ப வரும்.
மரித்த பின்பு நரகத்திலே நித்திய காலம் வே
தனைப்பட வேண்டியிருக்கும். ஆதலாற் பரி
சுத்த ஆவியின் ஏவுதலுக்கு அமைந்து நடந்து
பரகதி சேர வகைபார்ப்பீர்களாக.

பரிசுத்த ஆவியினுலுண்டாதும் அருளும் அறுதலும்.

க. பரிசுத்த ஆவியே,
பாவ இருள் போக்கியே
என் இருதயத்திலே
காலப்பண்ணுஞ்சோதியே.

உ. இயேசுவின் வெற்முகத்தை
தரிசனம்பண்ணவே
அருளி வெ உண்மையை
காட்டுஞ் சுத்த ஆவியே.

ங. சாத்தான் என்னை ஆண்டது
பாவம் என்னில் மிஞ்சிற்று,
என்னைச் சுத்தம்பண்ணியே
ஆண்டுகொள்ளும் ஆவியே

ச. தேவகளிப்புடனே
என்னை நிறைவாக்கியே
சொருக்குண்ட நெஞ்சையும்
ஆற்றித்தேற்றியருளும்.

ஞ. அடியேனின் நெஞ்சிலே
வாசம்பண்ணி சீர்தாமே,
என்றும் மென்மையாகவே
ஆளுர் நேவ ஆவியே.

மூற்றிற்று.